நிருபிக்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே என்று சொல்கின்ற அந்த அற்புதமான தத்துவத்தின் அடிப்படையில், அவர்கள் வருகை தந்து இங்கே சிகிச்சை பெற வேண்டும் என்று சொன்ன பிறகும்கூட, அது நிராகரிக்கப்பட்டு, அவர்கள் சென்றுள்ளதாகச் சொல்கிறார்களே, அதைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் உண்டா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை, அவர் பத்திரிகைகளிலே படித்துத் தெரிந்து கொண்டதாகச் சொல்லப்படுகின்ற ஒரு செய்தியே தவிர, அதிகாரப்பூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ திருமதி பார்வதி அம்மையார் அவர்களிடமிருந்து எந்தவிதமான பதிலும் இந்த அரசுக்கு வரவில்லை. "உங்களுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள இயலாது" என்ற கருத்து அமைந்த கடிதம் அவர்களால் அனுப்பப்படவில்லை.

இன்னும் சொல்லப்போனால், எந்தக் கடுமையான நிபந்தனைகளும் அம்மையார் அவர்களுக்கு விதிக்கப்படவில்லை. அவர்கள் அரசின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்; பாதுகாப்பு என்றால் "சிறைக் கோட்டம்" போன்ற பாதுகாப்பு அல்ல; போஷாக்கில் – ஒருவர் உடல்நலம் இல்லாமல் வரும்போது, அவரைக் காப்பாற்ற – அவருக்கு பரிந்து பணிவிடைகள் செய்ய – மருந்தளிக்க, தக்க டாக்டர்களிடத்திலே அவரது உடலைப் பரிசோதிக்க ஏற்றவொரு மருத்துவமனையிலே அவரைத் தங்க வைத்து, அடிக்கடி கவனித்துக் கொள்கின்ற அந்த முயற்சிகளை மேற்கொள்ள அரசின் பாதுகாப்பிலே இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதே தவிர, கடுமையான நிபந்தனைகள் எதுவும் அவர்களுக்கு விதிக்கப்படவில்லை. நிபந்தனைகளே எதுவும் விதிக்கப்படாத காரணத்தால், அவரைத் தாராளமாக – ஏற்கெனவே தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு தொடர்புகொள்ளவோ, தொடர்பு உள்ளவர்களோடு நட்பு கொள்ளவோ கூடாது என்பதுதான் நிபந்தனை.

2010 மே 11] [கலைஞர் மு. கருணாநிதி]

தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு ஒரு பிரதானமான, விளம்பரம் பெற்ற, மிக முக்கியமான ஒரு பிரமுகருடைய தாயார் இங்கே வந்து தங்கி இருக்கும்போது, அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே யாரும் அரசியல் நடத்துவதற்கு இடம் தராத வகையிலேதான், இந்த அரசு அத்தகைய நிபந்தனைகளை, "நீங்கள் ஏற்றுக்கொண்டால்தான் போச்சு; இல்லாவிட்டால் உங்களை இங்கே அனுமதிக்க முடியாது" என்று கூடச் சொல்லவில்லை. அவர்களுக்கு ஒரு "அட்வைஸ்" என்பதைப் போல, "நீங்கள் இங்கே வந்து தங்குங்கள்; சிகிச்சை பெறுங்கள். தகுந்த மருத்துவமனையிலே உங்களை அனுமதித்து, திறமையான டாக்டர்கள்மூலமாக உங்களுடைய உடல்நிலையைப் பரிசோதித்து ஏற்ற வைத்தியங்களைச் செய்கிறோம். ஆனால், அந்த நேரத்திலே உங்களை வைத்து யாராவது அரசியல் நடத்த விரும்பினால், அதற்கு நீங்கள் இடம் தரக்கூடாது" என்று கனிவோடு அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் – "அறிவுரை" என்று சொல்ல முடியாது. வேண்டுகோள் விடுத்து – அவர்களை இங்கே அனுமதிக்கத் தடையில்லை என்று மத்திய அரசு, மாநில அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. மாநில அரசும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கின்ற இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

ஒரு காலம் இருந்தது. கிராமப்புறங்களிலே ஒரு செய்தியைப் பத்திரிகைகளிலே படித்துவிட்டுச் சொன்னால், அப்பொழுதெல்லாம் "அதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்பார்கள். "பத்திரிகைகளிலே வந்திருக்கிறது" என்று சொன்னால், "அப்படியா! பத்திரிகைகளிலேயே வந்து விட்டதா?" என்று அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் வரும். இந்தக் காலத்தில் "பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன" என்று சொன்னால் "பத்திரிகைகளில்தானே செய்தி வந்திருக்கிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்ற அளவிற்கு பத்திரிகைச் செய்திகளாகிவிட்ட இந்தக் காலத்தில் பார்வதி அம்மையார் அவர்களுடைய திட்டவட்டமான பதில் வரும் வரையில், திரு. பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்கள் இதனை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2010 மே 11]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு உரையைக் கேட்பதற்காகத்தான் அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய விளக்கங்களை, ஆதாரங்களோடு பதில் சொல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஓடி ஒளிவதற்காக இந்த அரசு எப்போதும் இருக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, ஆதாரங்கள் இருந்தால் அதைத் தந்துவிட்டு தயவுகூர்ந்து அதுகுறித்துப் பேசவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் தந்துவிட்டுப் பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதை . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ** அதெல்லாம் இங்கே சொல்ல முடியாது. இங்கே அவையிலே பேசும்போது proof உடன் பேசுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயப்பாடுகளை வைத்து ஆதாரப்பூர்வமான செய்தி என்று குறிப்பிட்டால், இந்தப் பழக்கத்தை அல்லது இந்த முறையை ஒவ்வொரு உறுப்பினரும் கையாள நேரிடும். இந்த ஐயப்பாட்டிற்கு உங்கள் விளக்கம் என்ன என்று ஒவ்வொருவரும் கேட்டால், அது என்ன ஐயப்பாடு என்பது புரியாத புதிராக ஆகிவிடும். ஐயப்பாட்டை ஆதாரப்பூர்வமாக நீங்கள் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, திரு. விசுவநாதன், திரு. ரவிச்சந்திரன், திரு. ஜெயக்குமார் எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். ** என்று சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மற்றதைப் பேசுங்கள். இங்கே சபையிலே ஆதாரத்தோடு பேசுங்கள். இல்லாவிட்டால் allow பண்ணமுடியாது. (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.